# தென்னிந்திய தமிழ் திருச்சபை - அல்யென்

## CSI Tamil Parish Alain, UAE

# மன்னா..



கர்த்தர்
என் விண்ணப்பத்தைக் கேட்டார்;
கர்த்தர் என் ஜெபத்தை ஏற்றுக்கொள்வார்.

THE LORD
Has heard my plea;
the Lord accepts my prayer.

சங்கீதம் Psalm 6:9

பொழிவு: 13
ஆகாரம்: 05

May '2021




கிறிஸ்துவுக்குள் அன்பார்ந்த இறைமக்களே!

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

**....நீ உன் செவியை ஞானத்திற்குச் சாய்த்து, உன் இருதயத்தைப் புத்திக்கு அமையப்பண்ணும் பொருட்டு, நீ என் வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு, என் கட்டளைகளை உன்னிடத்தில் பத்திரப்படுத்தி.... நீதிமொழிகள் 2:1,2.**

...if you receive my words and treasure up my commandments with you, making your ear attentive to wisdom and inclining your heart to understanding. Proverbs 2:1,2

**ஞானம்:** ஞானம் என்பது அறிவு நுட்பம், மெய்யறிவு என்பதாகும். ஞானம் கடவுள் அருளும் அருட்கொடையாகும்.....

**அறிவு:** அறிவு என்பது நம்முடைய முயற்சியின் மூலம் கிடைப்பவை ஆகும். இந்த அறிவை நாம் முயன்று பெற்றுக்கொள்ள வேண்டும்....

இந்த புதிய கல்வி ஆண்டில் கடவுள் இப்படிப்பட்ட ஞானம், அறிவு கொடுத்து நம்மை வழி நடத்துவாராக.....

கடந்து நாட்களில் நடைபெற்ற அனைத்து ஆராதனைகள், நிகழ்ச்சிகள் அனைத்திற்காகவும் ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம். குறிப்பாக நமது திருச்சபையின் 13வது சபை நாள் இந்த கால சூழலுக்கு ஏற்றார்போல் நடத்தவும், ஆண்டவருக்கு நன்றி செலுத்தவும் ஆண்டவர் கிருபை செய்தார். நமது திருச்சபையின் முன்னோர்களை நினைவு கூறவும், அவர்களை வாழ்த்தவும் அழைக்கப்படுகிறோம்.. இந்த சிறப்பான நாளில் நம்முடன் ஆராதனையில் பங்கெடுத்த நமது தாய் சபையான அபுதாபி சி.எஸ்.ஐ.

திருச்சபையின் போதகர அருட்திரு. ஜெர்ரி ராஜ்குமார் அவர்களுக்கும், உப.தலைவர் திரு. கிரேப்சன், செயலாளர் திரு. ரஞ்சித் குமார் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்கு நன்றியைத்தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்த ஆராதனையை மிகவும் சிறப்பாக ஒழுங்கு செய்த நமது திருச்சபையின் நிர்வாக குழுவிற்கும், மற்றும் பொறுப்பாளர்கள், திருச்சபையின் மூப்பர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்கள், நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்..

தொடர்ந்து நமது திருச்சபையில் ஆன்லைன் வழியாக நடைபெறும் அனைத்து கூடுகைகள் மற்றும் ஆராதனைகளில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த கோவிட்-19 காலங்களில் நமது விசுவாச வாழ்வில் சோர்ந்து போகாமல் ஆண்டவருக்குள் நிலைத்திருக்கவும் தேசங்களுக்காக, திருச்சபைகளுக்காக, ஊழியங்களுக்காக, குறிப்பாக அமீரகத்தில் உள்ள மக்களுக்காக, அவர்களின் குடும்பங்களுக்காக, பாதுகாப்பிற்காக, வேலை வாய்ப்புகளுக்காக, பொருளாதாரத்திற்காக, நமது திருச்சபையின் குடும்பங்களுக்காக, நமது பிள்ளைகளின் கல்விற்க்காக, புதிய கல்வி அண்டிற்க்காக அவர்களின் எதிர்காலத்திற்காக... இந்த கொரோனா இரண்டாம் அலை மிகவும் பயத்தை ஏற்படுத்துகின்றது; இதிலிருந்தும் விடுவிக்கப்பட ஊக்கமாய் ஜெபிக்கும் மாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்....

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!
கிறிஸ்துவின் உன்னத பணியில் உங்கள் ஆயர்......Rev. S. P Baskar



# KORIJHOLLA CHURCH PROJECT

# கொரிஜ்ஹோலா ஆலையத் திட்டம்






## 2022

## இணைந்து கட்டுவோம் வாருங்கள்

கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபையின் ஆண்கள் சங்க அங்கத்தினர்களே, நமது திருச்சபையின் ஆண்கள் சங்கம் மூலமாக ஒடிசா மாநிலத்தின் கொரிஜ்ஹோலா கிராமத்தில் தேவாலயம் தேவாலயம் கட்ட தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்நாட்களில் ஆலையமின்றி வீதிகளிலும், வீடுகளிலும் ஆராதித்துக் கொண்டிருக்கும் சுமார் 65 குடும்பங்களுக்கு இது பயனுள்ளதாயிருக்கும். ஆகவே நமது திருச்சபையின் ஆண்கள் சங்க அங்கத்தினர்கள் யாவரும் முன்வந்து ஆண்டு உழைப்பின் சதமான தொகையினை மொத்தமாகவோ அல்லது தவனை முறையிலோ கொடுத்து;
கர்த்தருடைய ஆலயத்தை இணைந்து கட்ட ஒன்றிணைவோம்.
அனுதின ஜெபத்தாலும் இவ்வூழியத்தை தாங்குவோம்.



# துயரமிகுதியில் எழுந்த.. நம்பிக்கைப்புலம்பல்....

# சங்கீதம் 6

திருமறை தியானம்

## கர்த்தர் என் விண்ணப்பத்தைக்கேட்டார்; கர்த்தர் என் ஜெபத்தை ஏற்றுக்கொள்வார்.

## THE LORD HAS HEARD MY PLEA; THE LORD ACCEPTS MY PRAYER.

சங்கீதம் /Psalm **6:9**

**முன்னுரை:**

சங்கீதம்: 6: இது தவக்காலம் (அ) தபசு காலத்தில் துறவிகள் பாடும் பாடல் ஆகும். இந்த சங்கீதம் பாவமன்னிப்பு, பாவத்திற்காக மனம் வருந்துதல் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இந்த சங்கீதத்தில் "மீட்டருளும்" என்ற சொல் பாவ மீட்பு என்று பொருள் கொள்ள அழைக்கப்படுகின்றோம். மேலும் ஒரு தனி மனிதர் ஒருவர் தம்முடைய உடல் நோய் (V2) உளநோய் (V3-4) போன்றவற்றால் அலைக்கழிக்கப்பட்டு, இறைவனை நோக்கி எழும்பிய புலம்பற்பாடலாகும். பல்வேறு இன்னல்களுக்கும், இக்கட்டுகளுக்கும் ஆளாக்கப்பட்ட போது, இதிலிருந்து கடவுள் தன்னை காப்பாற்ற வேண்டும் என்று மன்றாடுகிறார். கடவுள் அவருடைய கூக்குரலை (அ) மன்றாட்டை கேட்கிறார்.(V 9-10) அவரது நம்பிக்கை (அ)விசுவாசம் உறுதிப்படுத்தப்படுகிறது. என்பதை இந்த சங்கீதம் மூலம் அறிந்து கொள்ளலாம்...

**Psalm:6.**

**An individual lament from David. it describes a person whose hard circumstances have led him to see his sins and to repent. Thus, it is often considered one of the "Penitential" Psalms...**

**சங்கீதம் 6:1- கர்த்தாவே..... உம்முடைய கோபத்திலே....தண்டியாதேயும்.......**

கோபம் கொள்வது என்பது ஒரு குறையாகும், குற்றமாகும், ஆண்டவரிடம் குறையோ, குற்றமோ இருக்க முடியாது. எனவே இங்கு கோபத்தையும்,கடிந்து கொள்வதும் கடவுளின் நேர்மை, நியாயம், நீதியின் குணத்தை அடையாளப்படுத்துகிறது (அ) பாவத்தினால் கடவுளிடமிருந்து விலகிப் போகும் நிலையே கடவுள் மனிதரிடம் கோபம் கொள்ளும் நிலையும் சுட்டிக்காட்டப்படுகிறது. எனவே மனிதர் கடவுளிடம் கோபம் கொள்ள வேண்டாம் என்று மிகுந்த நம்பிக்கையுடன் மன்றாடுவது ஆகும்..

**சங்கீதம் 6:2-3- நான் பெலனற்றுப் போனேன்... என் ஆத்துமா.... வியாகுல படுகிறது.....**
ஒரு மனிதர் தன்னுடைய உயிர், உடல், உள்ளம் சார்ந்து பெலனற்று போனபோது கடவுளை நோக்கி மன்றாடுவது ஆகும்....

**சங்கீதம் 6:4- உமது கிருபையின் நிமித்தம் (பேரன்பு) என்னை இரட்சியும்.....**
பேரன்பு என்பது "ஹெசது" என்ற எபிரேயச் சொல்லின் மொழிபெயர்ப்பு ஆகும். இதனை இரக்கம், கருணை என்று கூறலாம். மேலும் இதற்கு நிலைத்த அன்பு, நிபந்தனையற்ற அன்பு, தளராது அன்பு, நிறைந்த அன்பு, மாறாத அன்பு போன்ற வார்த்தைகளைக்குறிக்கும். எனவே கடவுள் நிபந்தனையற்ற அன்பினால் என்னை மீட்டருளும் என்றும் உனது கோபத்திற்கு விலக்கி காத்தருளும் என்று மிகுந்த நம்பிக்கையோடு மன்றாடுவது ஆகும்....

**சங்கீதம் 6:5- பாதாளத்தில் உண்மைத் துதிப்பவன் யார்?**
பாதாளம் என்பதற்கு "ஹெயோல்" என்ற எபிரேயச்சொல் பயன்படுத்தப்படுகிறது.
இதற்கு இருட்டு, குழி, கல்லறை, பள்ளம், அறிவின் தளம் என்று பல வார்த்தைகளால் அழைக்கப்படுகிறது. இது இருள் நிறைந்த இடமாகவும், கடவுளை நினைக்கவும், கடவுளிடம் தொடர்பு கொள்ளவோ, கடவுளிடம் வேண்டுதல் செய்யவோ, அவரைப் புகழ்ந்து பாடவோ இயலாது இடமாக கருதப்படுவது தான் பாதாளம் ஆகும்...

**சங்கீதம் 6:6-7... என் பெருமூச்சினால்....** இது உடல் நோய்களினாலும், உள்ளம் சார்ந்த நோயினாலும் பாதிக்கப்பட்ட நிலையை சுட்டிக்காட்டுகிறது..... இந்த நிலையில் கடவுளை நோக்கி மன்றாடுவது ஆகும்...

**சங்கீதம் 6:8-10. கர்த்தர் என் அழுகையின் சத்தத்தைக் கேட்டார்..... என் விண்ணப்பத்தைக்கேட்டார்......** இது மனிதரின் ஆழ்ந்த நம்பிக்கையை அல்லது விசுவாசத்தைக்காட்டுகிறது. பல துன்பங்களுக்கும், நோய்களுக்கும், பாவத்திற்கும் ஆளாக்கப்பட்ட நிலையில் ஆண்டவரை நோக்கி மன்றாடும் போது ஆண்டவர் இவரின் விண்ணப்பத்தைக்கேட்டு எல்லாவற்றிலும் விலக்கி மீட்டெடுத்தார் என்று நம்பிக்கை மிகுந்த பாடல் ஆகும்..

நிறைவாக.... இன்றைக்கு நாமும் இப்படிப்பட்ட நிலையில் இருக்கும்போது ஆண்டவர்மீது நம்பிக்கைக்கொள்ளும் போது நம்மையும் மீட்டெடுக்கிறார், நமக்கு எல்லா நிலைகளிலும் துணையாக இருக்கின்றார் என்று விசுவாசத்துடன் வாழ அழைக்கப்படுகின்றோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!
இறைப்பணியில் உங்கள் ஆயர்.
**Rev. S. P. Baskar......**

# செயலர் மடல்...

பிரியமானவர்களே...

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்கள் யாவருக்கும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக. ஜெபத்தினாலும் தியாக–உற்சாக காணிக்கைகளினாலும் இவ்வூழியத்தை தாங்கி வருகிற உங்களுக்கு கர்த்தர் தெய்வீக சமாதானத்தை அருளுவதோடு தமது செட்டைகளின் நிழலில் உங்களை பாதுகாத்து மகிமையினாலும் கனத்தினாலும் உங்களை முடிசூட்டுவாராக.

சென்ற மாதத்தில் தேவன் நமக்கு செய்தவைகளை நன்றியுடன் நினைவு கூறுவோம். வியாகுல வியாழன் ஆராதனை, மும்மணி நேர புனித வெள்ளி ஆராதனை, ஈஸ்டர் ஆராதனை, மற்றும் 13'வது சபைநாள் விழா இவையனைத்தும் நல்ல முறையில் நடைபெற தேவன் கிருபைக்கூர்ந்தார். 13'வது சபைநாள் விழாவிற்கு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட அருட்திரு.ஜெரி ராஜ்குமார் அவர்களுக்கும், பங்குபெற்ற உங்கள் அனைவருக்கும் எனது அன்பின் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் கூறிக்கொள்கிறேன். இம்மாதம் 14ம் தியதியன்று நடைபெறயிருக்கிற வருடாந்திர பொதுக்குழு கூட்டத்தில் ஜெபத்தோடு கலந்து கொள்ள அனைத்து உறுப்பினர்களையும் அன்புடன் அழைக்கிறேன். திருச்சபையின் வளர்ச்சியில் தொடர்ந்து உங்கள் ஆதரவை தாருங்கள். ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும் எண்ணிமுடியாத அதிசயங்களையும் அவர் செய்கிறவர், அவர் இன்னும் செய்வார்.

வரும் நாட்களில் செயல்படுத்த திட்டமிடப்பட்டிருக்கும் ஒவ்வொரு ஆராதனைகளுக்காக, திருச்சபையின் ஊழியங்களுக்காக அனைவரும் ஒருமனப்பட்டு ஜெபிப்போம். உங்கள் ஊக்கமான ஜெபமும், ஆதரவும், ஈடுபாடும் நம் திருச்சபை ஊழியத்தில் அதிகரிக்க, அதிகமாய் ஜெபித்திட வேண்டுகிறேன். அதிக உற்சாகத்தோடு அனைத்து ஆலய ஆராதனைகளில் பங்கு பெற்று தேவாசீர்வாதம் பெற்று செல்ல அன்புடன் அழைக்கிறேன்.

இப்படிக்கு...
அன்புடன் கிறிஸ்துவின் பணியில்
**எஸ்.சுரேஷ் ராஜன்**




**போராடி வென்ற தொழிலாளர் தினம்**
**இன்று பேச்சிலும், சட்டத்திலும்,**
**சிகப்பு வர்ணம் கொடிகளிலும் மட்டுமே வாழ்கிறது...**
**மனதால் உழைப்பின் புனிதத்தை உணர்வோம்..**
**உண்மை தொழிலாளர் தினம் கொண்டாடுவோம்...!!!**



# யோகெபேத்

## (மோசேயின் தாய் – யாத் 2:1-10)

முன்னுரை:

கொடிய பஞ்சகாலத்தில் உயிர் பிழைக்க யோசேப்பினால் எகிப்துக்கு கொண்டுவரப்பட்ட யாக்கோபின் புத்திரர்களில் "லேவியும்" ஒருவன். அந்த லேவிக்கு தனது முதிர் வயதில் எகிப்தில் பிறந்த மகள்தான் "யோகெபேத்" ஆவார். இந்த யோகெபேத் லேவியின் மகனான "கோகாத்தின்" மகன் "அம்ராவை" திருமணம் செய்தார் இவர்களுக்கு மிரியாம் என்ற மகளும், ஆரோன் என்ற மகனும் பிறந்தார்கள் (யாத்:6:20) அதைத்தொடர்ந்து அடிமைத்தனம், கொடிய பஞ்சம் எகிப்து தேசத்தில் வந்தது. இந்தநிலையில் எகிப்தில் பிறக்கும் ஆண் குழந்தைகள் கொலை செய்ய புதிய சட்டம் எகிப்தின் அரசர் கொண்டு வந்தார். இந்த இக்கட்டான சூழ்நிலையில் தான் "மோசே" பிறந்தார்.

**யோகெபேத்தின் விசுவாச வாழ்வு:**

1. **பார்க்கும் விசுவாசம்:**
   யோகெபேத் ஒரு ஆண் பிள்ளையைப் பெற்று அது அழகுள்ளது என்று கண்டு அதை மூன்று மாதம் ஒளித்து வைத்தார் (யாத்:2:2) அம்ராம், யோகெபேத் தம்பதியினர் தன் பிள்ளைகள் கடவுளில் வாரிசு என்று நம்பினார்கள். தாயும், தகப்பனும் கடவுளுக்கு முன்பாக நின்று பிள்ளைகளைப்பார்க்கிறார்கள். தாயும், தகப்பனும் அந்த பிள்ளையை அழகுள்ளது என்று காண்கிறார்கள். இப்படி பார்ப்பதால் கடவுளின் அழகு பிள்ளையின் முகத்தில் பிரகாசித்தது. கடவுளின் திட்டம் அந்த குழந்தையின் மூலம் நிறைவேற தொடங்கியது. இந்த திட்டத்தில் தாயும், தகப்பனும் தங்களை இணைத்துக் கொண்டார்கள்...

2. **பிரச்சனைகளை எதிர்கொள்ளும் விசுவாசம்:**
   மோசேயின் பிறப்பின் காலத்தில் ஏற்பட்ட பிரச்சனையை யோகெபேத் (யாத்:2:3) அந்த குழந்தையை ஒளித்து வைக்க கூடாமல் நாணற்பெட்டியை எடுத்து அதற்கு பிசினும், கீளும் பூசி அதிலே பிள்ளையைக் கிடத்தி நதியோரமாய் நாணலுக்குள்ளே வைத்தார். கடவுள் என் பிள்ளையைப் பாதுகாத்துக் கொள்வார் என்ற விசுவாசத்துடன் இதை செய்தார்....

3. **பயத்தை புறம்பாக்கும் விசுவாசம்:**
கடவுளின் பெயரில் யோகெபேத், அம்ராம் தம்பதியினர் வைத்த விசுவாசம் அவர்களின் பயத்தை புறம்பாக்கியது. அவர்கள் தங்களின் மேலான அதிகாரமுள்ளவர்களுக்கு, அரசர்களுக்கு பயப்பட்ட படியால் சரியான தீர்மானம் எடுத்தார்கள். இது அவர்களுக்கு கடவுள் மீது கொண்டுள்ள விசுவாசமும், தங்கள் குழந்தையின் மேல் வைத்துள்ள பாசமும் நிறைவேறுகிறது. எனவே அவர்களின் பயம் புறம்பாக்கப்பட்டது.....

4. **கீழ்ப்படியும் விசுவாசம்:**
யோகெபேத் தங்கள் ராஜாவின் கட்டளைகளுக்கு கீழ்ப்படி இருந்தார். ஆனால் அதில் விசுவாசம் கலந்த தைரியத்துடன் கீழ்ப்படிந்து செயல்பட்டார் என்பது தான் உண்மை. யொகெபேத் தன்னுடைய குழந்தை வைக்கப்பட்ட பெட்டியை நதியோரமாய் நாணலுக்குள் வைத்தார். இதில் அவருடைய விசுவாசம் அதிகமாக இருக்கிறது. இங்கு பரந்து விருந்து இருக்கும் நைல் நதியில் இந்த இடத்தில் வைப்பது எகிப்தின் இளவரசி இங்கு குளிக்க வருவார் என்ற நம்பிக்கையும்,கடவுள் மீது கொண்டுள்ள விசுவாசத்தையும் காட்டுகிறது.

தொடர்ந்து தனது குழந்தையைக் கவனிக்க தனது மகள் மிரியத்தை வைக்கிறார். மிரியாம் தூரத்தில் இருந்து குழந்தைக்கு என்ன நடக்கிறது என்று கவனித்துக்கொண்டிருந்தார். பார்வோனின் குமாரத்திகளின் கண்களில் குழந்தை கிடைத்தவுடன் மிரியாம் அங்கு சென்று இந்தப் பிள்ளையை வளர்ப்பதற்கு எபிரேய பெண்ணை அழைத்து வரட்டுமா என்று கேட்கிறார். இந்த செயல்பாடுகள் எல்லாம் யோகெபேத் கடவுள் மீது கொண்டுள்ள ஆழ்ந்து விசுவாசத்தை காண்பிக்கின்றது....

இந்த நிகழ்வின் மூலமாக கடவுளின் திட்டம், இஸ்ரவேல் மக்களின் விடுதலைக்கு மோசே உருவாக காரணமாயிருந்தது. இன்றைக்கு இப்படிப்பட்ட ஒரு விசுவாசமுள்ள தாயாக நம்மை அர்ப்பணிக்க அழைக்கப்படுகின்றோம்...

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

இறைப்பணியில் ஆயரம்மா....
**MRS. E. NANCY BASKAR...**






**ராஜாவின் கோபம் மரண தூதருக்கு சமானம் ஞானமுள்ளவனோ இதை ஆற்றுவான்.. (நீதி16:14)**

இங்கிலாந்து மன்னரின் தங்க கிரீடத்தை திருடி புகள் பெற்றவர் ஐரீஸ் நட்டை சேர்ந்த தாமஸ்பிளட் என்பவர். இங்கிலாந்து உள்நாட்டுப்போரில் அரசுக்கு ஆதரவாக செயல்பட்டதற்க்காக பண்ணைவீட்டை அரசு இவருக்கு பதிலளித்தது. 1160'ல் இரண்டாம் சார்லஸ் மன்னர் ஆனார். பண்ணை வீட்டை பற்றிக் கொண்டார்.

இதற்க்காக மன்னருக்கு எதிரியான பிளட், அரண்மனைக்குள் தந்திரமாக நுளைந்து, கிரீடத்தை திருடினார். வெளியேறும் போது காவலர்களிம் சிக்கி கொண்டார்.

கிரீடத்த திருடியது திருடுவதற்க்காக அல்ல, அரசை சந்திக்கும் சந்தற்ப்பத்தை உருவாக்கவே என்று பிளட் புத்திசாலித்தனமாக சொல்லிக் கொண்டார்.

கொடிய குற்றத்தின் கூரை தனது ஞானத்தால் மழுங்க செய்த பிளட்டின் பதில் அரண்மனைக்கு அதிர்ச்சியாய் இருந்தது. மன்னர் அவரை சந்தித்து அவரை மன்னித்ததோடு பண்ணை வீட்டையும் அரசு பணியையும் கொடுத்து சிறப்பித்தது.

அன்பானவர்களே! நாமும் ஞானமாய் பேச பழக கற்றுக் கொள்ளுவோம்.

**நெல்சன் சோபித ராஜ்.**

MEN'S FELLOWSHIP

**நீ யார் என்பது தேவன் தந்த பரிசு....**

**நீ யாராக வாழ்கிறாய் என்பது நீ அவருக்கு தரும் பரிசு...!!!**



# சோம்பல்

- சோம்பல் என்பது தேவனால் வெறுக்கப்பட்ட ஒன்று.
- ஆதி மனிதனை படைத்த தேவன் உடனே அவர்களுக்கு வேலை கொடுத்து உழைக்க சொன்னார்.
- ஆதி 2:15 தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார்.
- தேவன் சோம்பேறித்தனத்தை கடிந்துகொள்கிறார்.
- அது அவருக்கு பிடிக்காத ஒன்று.
- இஸ்ரவேலை காக்கிற தேவன் உறங்குவதுமில்லை, தூங்குவதுமில்லை.

**சங்கீதம் 121:4 இதோ இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குவதும் இல்லை**

## சோம்பலின் விளைவுகள்

### 1. தேவன் அவர்களுக்கு உதவி செய்ய விரும்புவதில்லை:

- தேவன் பாவிகளுக்கு செவிகொடுப்பதில்லை என்பது நாம் அறிந்ததே...
- யோவான் 9:31 பாவிகளுக்கு தேவன் செவிகொடுப்பதில்லை என்று அறிந்திருக்கிறோம் ஒருவன் தேவவபக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதை செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பானர்.
- தேவன் உதவி செய்யக்கூடாத மற்றொரு கூட்டம் - சோம்பேறிகள்
- தேவன் பாவிகளை எந்த அளவு வெறுக்கிறாறோ, சோம்பேறிகளை அந்த அளவு வெறுக்கிகிறார்.
- பத்து கன்னிகைகள் உவமையில் 5'பேர் அக்கறையுள்ளவர்களாய் எண்ணெய்கொண்டு வந்தார்கள்.
- மீதம் 5'பேர் வரும்போது பார்த்துக்கொள்ளலாம் என்று சோம்பேறித்தனதினால் அக்கறைமையாக இருந்தார்கள்.
- அவர்கள் வந்து கதவைத் தட்டியபோது மணவாளன் கதவு திறக்கவில்லை.
- மேலும் அவர் உங்களை அறியேன் என்றார்.
- மத்தேயு 25:3,11-12 புத்தியில்லாதவர்கள் தங்களை திவட்டிகளை எடுத்துக்கொண்டு போனார்கள் எண்ணெயையோ கூடக்கொண்டு போகவில்லை, பின்பு மற்ற கன்னிகைகளும் வந்து ஆண்டவரே எங்களுக்குத் திறக்கவேண்டும் என்றார்கள். அதற்கு அவர் உங்களை அறியேன் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

**பிதாவின் சித்தப்படி செய்யாத பாவிகளையும் அவர் அறியார் (மத் 7 : 21-23)**

## 2. அவர்களுக்கு மனித தயவும் கிடைக்காது.

- நீதி 20:4- சோம்பேறி குளிருகிறதென்று உழமாட்டான்.அறுப்பிலே பிச்சை கேட்டாலும் அவனுக்கு ஒன்றும் கிடைக்காது.
- பிச்சை கிடைக்கிற காலத்தில் கூட பிச்சைகிடைக்காது.
- அப்படியென்றால், தேவன் அவர்களுக்கு மனிதக் கண்களில் தயவை காண்பிக்க விரும்பவில்லை.

## 3. அவர்களை வறுமை சூழும்

- நீதி 24:30-34 சோம்பேறியின் வயலையும் மதியீனனுடைய திராட்சைதோட்டத்தையும் கடந்துபோனேன். இதோ, அதெல்லாம் முள்ளுக்காடாய் இருந்தது; நிலத்தின் முகத்தை காஞ்சொறி மூடினது, அதின் கற்சுவர் இடிந்து கிடந்தது, அதை கண்டு சிந்தனை பண்ணினேன் அதை நோக்கி புத்தியடைந்தேன். இன்னும் கொஞ்சம் உறங்கட்டும், இன்னும் கொஞ்சம் கைமுடக்கிக்கொண்டு நித்திரை செய்யட்டும் என்பாயோ? உன் தரித்திரம் வழிப்போக்கனை போலும் உன் வறுமை ஆயுதமணிந்தவனைப் போலும் வரும்.

## 4. அவன் விரும்பியதை பெற மாட்டான்

- நீதிபதி13:4 சோம்பேறியுடைய ஆத்துமா விரும்பியும் ஒன்றும் பெறாது: ஜாக்கிரதையுள்ளவர்களுடைய ஆத்துமமோ புஷ்டியாகும்.
- நீதி 21:25 சோம்பேறியின் கைகள் வேலை செய்ய சம்மதியாததினால் அவன் ஆசை அவனைக் கொல்லும். வெறும் கனவு மட்டும் காண வேண்டியது தான் உழைக்காதவர்களுக்கு தேவன் ஒன்றும் கொடுப்பதில்லை. முயற்சி செய்யாதவர்களுக்கு தேவன் அருள் புரிவதில்லை.



# ஆபத்து காலத்தில்...



நம் வாழ்க்கையில் ஆபத்து வராது என்று நாம் சொல்ல முடியாது. இந்த உலகத்தில் நாம் அநேக ஆபத்துக்களைக் கடந்து வாழ வேண்டியதாக இருக்கிறது. ஆனால் ஆபத்துக்காலத்தில் நாம் சோர்ந்து போக கூடுமா? இயற்கையாக நம்முடைய வாழ்க்கையில் ஆபத்து வேளைகளில் சோர்ந்து போக வாய்ப்பு உண்டு. ஆனால் இதை நாம் எவ்விதம் மேற்கொள்வது? ஆபத்தை நான் நிச்சயமாய் கடந்து போக வேண்டியதாக இருக்கும். அதை நான் வெற்றியோடு கடந்து போக விரும்புகிறேன் என்று நீங்கள் சொல்வீர்களானால், உங்களுடைய வாழ்க்கையில் ஆவிக்குரிய விசுவாசம், பெலம் தேவை.

இந்த உலகத்தின் ஞானத்தினாலோ, மாம்சத்தினாலோ வாழ்க்கையில் நீங்கள் வாழ நினைக்கும்பொழுது, நீங்கள் சோர்ந்து போவது நிச்சயம். ஆனால் நீங்கள் ஒரு விசுவாசியாக இருப்பீர்களானால், இன்றைய வாழ்க்கையில் தேவன் உங்களை பலப்படுத்தவும், நீங்கள் தேவனிடத்திலிருந்து பலத்தைப் பெற்று வாழவும் அறிந்த ஒரு நபராக இருப்பீர்கள்.

தாவீதும் தன்னுடைய வாழ்க்கையில் சவுலினால் நெருக்கப்பட்ட நிலையில் “தாவீது: நான் எந்த நாளிலாகிலும் ஒரு நாள் சவுலின் கையினால் மடிந்துபோவேன்; இனிச் சவுல் இஸ்ரவேலின் எல்லைகளில் எங்கேயாவது என்னைக் கண்டுபிடிக்கலாம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகும்படிக்கும், நான் அவன் கைக்கு நீங்கலாயிருக்கும்படிக்கும், நான் பெலிஸ்தரின் தேசத்திற்குப் போய், தப்பித்துக்கொள்வதைப்பார்க்கிலும் நலமான காரியம் வேறில்லை என்று தன் இருதயத்தில் யோசித்தான்” (1சாமு 27:1).

நம் வாழ்க்கையில் நாம் ஆண்டவருடைய கிருபையைச் சார்ந்து கொள்ளத்தவறினால் சோர்ந்து போவோம். விசுவாசமாய் நம்முடைய வாழ்க்கையில் பேசுவோம், நடப்போம். நம்முடைய வாழ்க்கையில், நாம் ஆவிக்குரிய தைரியம் உள்ளவர்களாகக் காணப்படவேண்டும். இந்த உலகத்தில் ஆண்டவர் நம் வாழ்க்கையில் ஆபத்தை அனுமதித்தாலும், அவருடைய சித்தமில்லாமல் அது நமக்கு வருவதில்லை. ஆனாலும் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அப்பொழுது நாம் ஆபத்திலும் நம்பிக்கையோடும் தைரியத்தோடும் வாழ முடியும்.

YOUTH FELLOWSHIP ARTICLE

“ஆபத்துக்காலத்தில் நீ சோர்ந்து போவாயானால், உன் பெலன் குறுகினது” (நீதி 24:10).

# தமிழ் வேதாகமத்திலுள்ள அர்த்தம் புரியாத வார்த்தைகள்



| *வார்த்தை* | *பொருள்* | *வேதப்பகுதி* |
|---|---|---|
| அகணிநார் | நரம்புக் கயிறு, நார்க்கயிறு | நியா 16:7,8 |
| அகத்தியம் | கட்டாயம் | எண் 18:15, எஸ்4:8, லூக் 14:18 |
| அகாதமான | ஆழமான படுகுழி | ஏசா 14:15 |
| அசங்கியம் | அருவருப்பு | எஸ் 9:11 |
| சம்பி | உடல் | 1சாமு 21:5 |
| அசறு | சொறி, சிரங்கு | லேவி 13:6-8; 14:56; 21:20 |
| அசனம் | உணவு | 2சாமு 9:11,13; 12:21 |
| அசுப்பிலே | திடீரென்று | யோபு 9:23; 22:10; எரே 4:20 |
| அசுப்பீம் வீடு | பண்டக சாலை | 1நாளா 26:15,17 |
| அசூசம் | தீட்டு | புல 1:9 |
| அஞ்சனம் | மந்திரவாதம் | உபா 18:10 |
| அஞ்சிக்கை | நடுக்கம், அச்சம் | ஓசி 3:5 |
| அடைப்பம் | பை | 1சாமு 17:40,49 |
| அநாதி | நித்தியமான, முடிவற்ற | உபா 33:27 |
| அநுக்கிரகம் | கருணை | ஆதி 19:21 |
| அமரிக்கை | அமைதி | ஏசா 32:17 |
| அப்போஸ்தலர் | திருத்தூதுவர் | மாற் 6:30 |
| அமஞ்சிவேலை | அடிமை வேலை | 1ராஜா 5:13,14; 9:21 |
| அபேட்சை | விருப்பம், எதிர்பார்ப்பு | 1சாமு9:20;யோபு34:36;நீதி10:28; 11:7 |




இந்து பின்னணியிலிருந்து இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட குடும்பத்தின் மூன்று சகோதரர்களும் தங்களை ஆண்டவரின் ஊழியத்திற்கு அர்ப்பணம் செய்து திருச்சபையை கட்டும் போதகர்களாக முழுநேர பணியில் ஈடுபட்டார்கள் என்பது வியக்கத்தக்கதல்லவா? இப்படிப்பட்ட குடும்பத்தின் மூத்த சகோதரராக விளங்கிய வரை மாசிலாமணி ஐயராவார். அவரது இளைய தம்பி வே.சந்தியாகு ஐயரும் சிறந்த பாடலாசிரியர் மற்றும் இசை வல்லுநர் என்பதை நாம் அறிவோம்.


மாசிலாமணி ஐயர் திருப்புவனம் என்ற சிற்றூரில் போதகராக பணியாற்றிய நாட்களில் இந்த கும்மிப்பாடலை எழுதினார். ஆண்டவரின் புகழை அனைவரும் அறியும் வண்ணம் அவரைப் போற்றிப் பாட திருச்சபையாகிய கன்னியரை அழைப்பதாக இப்பாடலை மாசிலாமணி எழுதியிருக்கிறார். சிற சிறந்த வயலின் வித்வானாகிய மாசிலாமணி தனது பாடல் மற்றும் இசை தாலந்துகளை நற்செய்தி பணிக்கென முழுவதுமாக அர்ப்பணித்து செயல்பட்டார்.

திருவண்ணாமலையின் வாரச்சந்தை நாட்களில் மாசிலாமணி தன் நண்பர்களுடன் அங்கு சென்று இசைக்கச்சேரி நடத்துவார். அப்போது அவரின் பாடலையும் இசையையும் கேட்க சந்தைக்கு வந்த மக்கள் கூட்டமாக கூடுவார்கள் அவர்களுக்கு நற்செய்தியை பக்குவமாக பாடல்கள் வழியாக அவர் எடுத்துக் கூறி ஆண்டவரின் அன்பால் அவர்களை கவர்ந்திடுவார்.0

மாசிலாமணி எழுதிய **“ஆர் இவர் ஆராரோ”** என்ற கிறிஸ்மஸ் பாடலும் **“வந்தனம் வந்தனமே**” மற்றும் **“ஆனந்தமே ஜெயா ஜெயா”** என்ற புத்தாண்டு பாடல்களும் கிறிஸ்தவ சமுதாயத்திற்கு பண்டிகைகளின் மகிழ்ச்சியை கூட்டித் தரும் பிரபலமான பாடல்களாக விளங்குகின்றன கருத்துச் செறிவுடன் விளங்கும் இப்பாடல்கள் நூற்றாண்டு காலமாய் திருச்சபை மக்களனைவரும் விரும்பிப் பாடும் பாடல்களாக திகழ்கின்றன இப்பாடல்கள் பிரபலமாவதற்கு அவர் அமைத்த சிறந்த இசைப்பண்களும் காரணமாகும் இசையும் பாடலும் அருமையாக இணைந்து வருவதை ஆனந்தமே ஜெயா ஜெயா என்ற பாடலை பாடி மகிழ்வோர் நன்கு அறிவர்.

*பாடல் : மாசிலாமணி*
*ராகம் : மாசிலாமணி*

Kids Coloring



WORD SEARCH

# THE FRUIT OF THE SPIRIT

PRIMARY

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| K | G | W | T | K | G | Q | T | C | A | D | P | F |
| I | M | F | F | W | K | Y | O | L | X | D | A | I |
| K | C | F | F | Q | L | F | I | Y | O | I | T | V |
| I | I | K | A | O | S | G | L | O | T | V | I | W |
| X | M | Q | I | O | R | Y | E | H | V | S | E | D |
| L | O | R | T | N | O | C | F | L | E | S | N | A |
| W | B | R | S | J | D | U | R | A | I | E | C | H |
| U | J | I | O | B | L | N | T | Z | C | N | E | G |
| J | Y | Z | L | N | J | Q | E | A | R | D | L | L |
| X | B | F | E | M | U | U | E | S | D | O | Y | B |
| Q | Q | S | D | X | U | P | O | Q | S | O | B | T |
| A | S | S | E | N | E | L | T | N | E | G | M | O |
| X | L | G | J | O | M | L | Q | U | P | U | L | N |

Galatians 5:22-23




FAITHFULNESS
GENTLENESS
GOODNESS
JOY
KINDNESS
LOVE

PATIENCE
PEACE
SELF-CONTROL


SEARCH

# JUNIOR A






JEREMIAH






ERIC AARON






JAMIE

Mrs.Jeyantha John

JUNIOR


# The FRUIT of the Spirit

Draw lines to match each fruit of the Spirit with its meaning.

| | |
|---|---|
| 1. Love | a. To have the strong feeling of well-being that comes from being right with God |
| 2. Joy | b. To help and show love for others |
| 3. Peace | c. To be reliable and keep your promises |
| 4. Forbearance | d. To have a deep, happy feeling that comes from being right with God and others |
| 5. Kindness | e. To be thoughtful and considerate; not harsh |
| 6. Goodness | f. To like something or someone so much that it causes you to do good |
| 7. Faithfulness | g. To have power over one's own actions |
| 8. Gentleness | h. To be patient; to wait calmly without complaining |
| 9. Self-control | i. To be honest and useful |

# FRUIT OF THE SPIRIT

CROSSWORD




## ACROSS

4) The book of the Bible where Paul mentions the fruit of the spirit.
5) Great is your ______. (Lamentations 3:23 ESV)
8) Pursue righteousness, godliness, faith, love, steadfastness, and ____. (1 Timothy 6:11 ESV)
11) One who loves what is good, who is _______, upright, holy and disciplined. (Titus 1:8 ESV)

## DOWN

1) The Hebrew name for the Holy Spirit. (*Hint: starts with the letter 'r'*)
2) God is gracious, merciful, slow to anger, and of great loving ____ . (Psalm 145:8 ESV)
3) Love is _____, love is kind. (1 Corinthians 13:4 ESV)
6) Do the best you can to live in ______ with everyone. (Romans 12:18 ESV)
7) A Hebrew name for God. (*Hint: starts with the letter 'Y'*)
8) Yah is _____, a stronghold in the day of trouble. (Nahum 1:7 ESV)
9) Your statutes are my heritage forever; they are the ___ of my heart. (Psalm 119:111 ESV)
10) _____ your neighbor as yourself. (Mark 12:31 ESV)

Junior

INTERMEDIATE


Ask Yourself



# How's your FRUIT?

Rate yourself to see how your "fruit" is doing.

1= Doing great
2= Doing OK, but could do better
3= Could do lots better



| | | |
|---|---|---|
| ___ Love | ___ Forbearance | ___ Faithfulness |
| ___ Joy | ___ Kindness | ___ Gentleness |
| ___ Peace | ___ Goodness | ___ Self-control |

## The PARTICIPANTS



| Kidz Colouring | Word Code | Bible Quiz | Cross Word |
|---|---|---|---|
| CRASSLIN DEVONA | JASON ERIC | JASON ERIC | ROSHAN |
| CHRIS GABRIEL | JEREMIAH | JONATHAN | JOSHUA |
| HAZEL HARTLYN | JONATHAN | | |
| JEMIMA ASHNI | | | |

Congratulations

the book of

# ACTS QUIZ!

1 - 10

## அப்போஸ்தலர் நடபடிகள்

QUESTIONS

1. பேதுரு வந்தபோது எத்தனைப் பேர் கூடியிருந்தார்கள்?
2. பேதுரு ஒரு தீர்க்கதரிசியினால் இது நடக்கிறது என்றார் அந்த தீர்க்கதரிசி யார்?
3. சப்பாணி குணமாக்கப்பட்டது கேள்விப்பட்டு மக்கள் எங்கு ஓடி வந்தார்கள்?
4. யார் எல்லாம் எருசலேமில் கூடினார்கள்?
5. அப்போஸ்தலர்களைப் பிடித்து எங்கு வைத்தார்கள்?
6. ஸ்தேவானிடம் யாரெல்லாம் தர்கம் பண்ணினார்கள்?
7. எங்கு ஆகாரம் கிடைக்காமல் போனது?
8. மாய வித்தைக்காரன் யார்?
9. எட்டு வருஷமாய் திமிர் வாத நோயில் இருந்தது யார்?
10. பேதுருவின் வருகைக்காக கொர்நேலியு எந்த பட்டணத்தில் காத்திருந்தார்?

### ஏப்ரல மாத விடைகள் / எழுதியவர்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. யோ: 11:55 | 2. யோ: 12:11 | 3. யோ: 13:37 | 4. யோ: 14:22 | 5. யோ: 15:14 |
| 6. யோ: 16:8 | 7. யோ: 17:14 | 8. யோ: 18:10 | 9. யோ: 19:19 | 10. யோ: 20:24 |

திருமதி. ஜோனீஷ் ஹெர்ஷெல், திருமதி. பிரிஸ்சில்லா ஜாண்சன், திருமதி. அகஸ்டா லாரன்ஸ்,
திருமதி. ஜமுனா ராணி, திருமதி. ஜெயின் ராஜவேல், திருமதி. ராதிகா செல்வகுமார்,
திருமதி. ஜெனிபர் இம்மாக்குலேட், திருமதி. ரோஸ்லின் பாலாஜி,
திருமதி. பமீலா டேனியல், திருமதி. ஹெப்சிபாய் நேசமணி,
திருமதி. ஜெயந்தா ஜாண், திருமதி. பிப்லின் நெல்சன்,
திருமதி. அனித்தா ராஜன்




## Happy Birthday


| | |
|---|---|
| 01 | MS. ALEN MAISIE |
| 02 | MR. GAIN |
| 03 | MR. ASHOK KUMAR |
| 05 | MRS. LAVANYA KANNAN |
| 07 | REV. S. P. BASKAR |
| 08 | BABY. JESIL BERNICE |
| 09 | MR. ANBU DAS |
| 10 | MRS. BEULA RANI LIVINGSTON |
| 11 | MR. RAJESH CHELLADURAI |
| 13 | MR. SELVISTOR SOLOMON |
| 14 | MR. KUMAR |
| 15 | MR. GEORGE ROSE |
| 16 | MR. A SELVAKUMAR |
| 16 | MR. BASKAR JOHNSON |
| 16 | MRS. NIRMALA JENIFER PAUL |
| 18 | MR. R ARULDHAS |
| 19 | MRS. SALINI VIMALA KINGSLY |
| 19 | MR. ROBERT WILSON. T |
| 19 | MR. VIJIN RAJ. P |
| 20 | MR. PUSHPARAJ.B |
| 23 | MR. C. HAVIN HEBA |
| 25 | DR. SHINO P MATHEW |
| 25 | MR. MAHENDRAN. R |
| 26 | MS J. H. JUANA |
| 29 | MR. JOHN SOLOMON |

## Happy Anniversary!

| | |
|---|---|
| 04 | MR. LAWRANCE GAMBEERAM<br>MRS. AUGUSTA LAWRANCE |
| 06 | MR. R ARULDHAS<br>MRS. PRASSANA |
| 07 | DR. SHINO P MATHEW<br>DR. SHELLY KURIAN |
| 12 | MR. SELVA KUMAR &<br>MRS. RADHIKA GRACE |
| 13 | MR. JOHN JOSEPH<br>MRS. JESSY BEULA |
| 25 | MR. ANTONY JESU RAJAN<br>MRS. JAMUNA RANI |
| 25 | MR. DAVID SORNABALAN<br>MR. YESUBAI |
| 25 | MR. VIJIN RAJ<br>MRS. PAMELA JENIFFER |
| 26 | MR. Y.MESIAH DAS<br>MRS. SUJA JASMINE |
| 26 | MR. RAJESH CHELLADURAI<br>MRS. SHALINI |

என்னாலே உன் நாட்கள் பெருகும்; உன் ஆயுசின் வருஷங்கள் விருத்தியாகும்.

நீதிமொழிகள் 9:11




# CSI Tamil Parish Al Ain

United Arab Emirates

7th May 2021

# எசேக்கியேல்

EDITOR

THE PRESBYTER, CSI TAMIL PARISH, ALAIN, UNITED ARAB EMIRATES

POST BOX. 67747 | TEL: +971 (3) 755 9630 | MOB: 056 7105 082

**Email: csitcalain@gmail.com | Web: csitamilparishalain.org**

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY